**செய்தி வெளியீடு எண்: 993** **நாள்: 10.11.2010.**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது, அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின், சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் நவம்பர் 2010 மாதத்திற்கான மக்கள் குறைதீர் கூட்டம் 13.11.2010 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/— கா. பாலச்சந்திரன்,
ஆணையாளர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆணையாளருக்காக

| வ.எண் | மண்டலங்களின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்களின் முகவரி |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் மண்டலம் | முத்தையால்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, 168/87 தம்புசெட்டி தெரு, சென்னை–1 (காளிகாம்பாள் கோவில் எதிரில்) |
| 2 | இராயபுரம் மண்டலம் | சென்னை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி, 731,திருவொற்றியூர் நெடுஞ்சாலை, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை–81 |
| 3 | பெரம்பூர் மண்டலம் | செனை மாநகராட்சி தொடக்கப்பள்ளி, 143, நியூ பேரக்ஸ் ரோடு, சென்னை–12,(தாசாமாக்கான் மசூதி பின்புறம்) |
| 4 | அண்ணாநகர் மண்டலம் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 150, வெள்ளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை–84 (ஓட்டல் சரவணபவன் அருகில்) |
| 5 | அம்பத்தூர் மண்டலம் | எம்.ஜி.ஆர் ஆதர்ஸ் மேல்நிலைப்பள்ளி, முகப்பேர் கிழக்கு, சென்னை–37 |
| 6 | வில்லிவாக்கம் மண்டலம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, சிவன் கோவில் வடக்கு மாடவீதி, வில்லிவாக்கம், (வில்லிவாக்கம் பஸ் ‘நிலையம் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் மண்டலம் | நகராட்சி நடுநிலைப்பள்ளி, காந்தி நகர், விம்கோநகர், திருவொற்றியூர், சென்னை–19 |
| 8 | ஆவடி மண்டலம் | வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மேலப்பேடு நடுநிலைப்பள்ளி, பாலவேடு ஊராட்சி , செ–55 |
| 9 | தி.நகர் மண்டலம் | ஸ்ரீசாரதா நடுநிலைப்பள்ளி, மேட்லி இரண்டாவது தெரு, தி.நகர், சென்னை–17 |
| 10 | மயிலாப்பூர் மண்டலம் | கல்யாண்நகர் அசோசியேஷன், 29,வெஸ்ட் சர்க்குலர் சாலை, மந்தைவெளிப்பாக்கம், செ–28 |
| 11 | பரங்கிமலை மண்டலம் | பல்லாவரம் மறைமலைஅடிகள் மேல்நிலைப்பள்ளி, பல்லாவரம் காவல் நிலையம் எதிரில் பல்லாவரம், சென்னை–42 |
| 12 | தாம்பரம் மண்டலம் | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, பதுவஞ்சேரி இருப்பு) அகரம் தென்சென்னை–73 |
| 13 | சைதாப்பேட்டை மண்டலம் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி, பூந்தமல்லி சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை–32 |
| 14 | ஆயிரம்விளக்கு மண்டலம் | சென்னை நடுநிலைப்பள்ளி, 64/162, இராமநாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம், செ–34 |
| 15 | சேப்பாக்கம் மண்டலம் | சமூகநலக்கூடம், 123/3 சிங்கண்ண செட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2 |
| 16 | சோழிங்கநல்லூர் மண்டலம் | முதல்நிலை ஊராட்சி அலுவலக வளாகம், ஒக்கியம் துரைப்பாக்கம், ராஜுவ்காந்தி சாலை, சென்னை–97 |

ஒம்/-கா.பாலச்சந்திரன்
ஆணையாளர்

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**